கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம், வடமாகாணம்
සමූපකාර සංවර්ධන දෙපාර්තමේන්තුව උතුරු පළාත
DEPARTMENT OF CO-OPERATIVE DEVELOPMENT, NORTHERN PROVINCE
Elders Home Complex, Kandy Road, Kaithady, Jaffna

Our Ref:- Np/15/AD2/CI -2015 Your Ref:- 19.02.2015

சுற்றுநிருபம் 1/2015

சகல கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்கட்கும்,

1972ம் ஆண்டின் 5ம் இலக்க கூட்டுறவுச்சங்கங்கள் சட்டத்தின் 58ம் பிரிவின் கீழ் ஆற்றுப்படுத்தப்படும் பிணக்குகள் தொடர்பில் நடுத்தீர்ப்பாளர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகள்

1. மேற்படி கொடுப்பனவுகள் 01.04.2015 லிருந்து பின்வரும் விதிமுறைகளுக்கமைய நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

1.1 பொதுப்பிணக்கு

| பிணக்கிற்கு ஆற்றுப்படுத்தப்படும் தொகை(ரூ) | வழங்கக்கூடிய கொடுப்பனவு |
|---|---|
| ரூபா 5000/வரை | ரூபா 800/- |
| ரூபா 5001/ - ரூபா 10000/-வரை | ரூபா 2200/- |
| ரூபா 10001/ - ரூபா 25000/-வரை | ரூபா 3500/- |
| ரூபா 25001/ - ரூபா 100000/-வரை | ரூபா 4750/- |
| ரூபா 100001/ - ரூபா 250000/-வரை | ரூபா 6000/- |
| ரூபா 250001/ - ரூபா 500000/-வரை | ரூபா 7500/- |
| ரூபா 500001/ - ரூபா 750000/-வரை | ரூபா 8000/- |
| ரூபா 750001/ - ரூபா 1000000/-வரை | ரூபா 10000/- |
| ரூபா 1000001/ - மேல் | ரூபா 12000/- |
| | |

1.2 சகலவிதமான கடன்பிணக்குகளுக்கும் நடுத்தீர்ப்பாளர் கொடுப்பனவு ரூ 750.00 வழங்கப்படும்.
1.3 சகலவிதமான பிணக்குகளின் விசாரணைகள் தொடர்பாக ஏற்படும் தபால், காகிதாதி செலவுகளுக்கு ரூ 500.00இற்கு மேற்படாமல் செலவுத்தொகை வழங்கப்படலாம்.

2. தொகைகளும் தகமைகளும்,

2.1.பொதுப்பிணக்குகள்

| பொதுப்பிணக்கின் தொகை | நடுத்தீர்ப்பாளர் தகமை. |
|---|---|
| 2.1.1 ரூ 5000.00 வரையான பிணக்குகள் | கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் II(ஆ) /(III)ஐசேர்ந்த 5வருடத்துக்கு குறையாத சேவை அனுபவமும்,<br><br>பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட உத்தியோகத்தர். |
| 2.1.2.ரூ 5001.00லிருந்து ரூபா 10000.00 வரையான பிணக்குகள் | கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம்<br><br>(II)ஆ/(III)ல் 8வருடத்திற்கு குறையாத சேவை அனுபவமும், பதவியில் உறுதிப்படுத்தப்பட்டவரும் அல்லது கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் IIஅ/IIல் 3வருடத்திற்கு குறையாத சேவை அனுபவமும் உள்ள உத்தியோகத்தர் |
| 2.1.3.ரூ10001லிருந்து ரூ25000 .00வரை | கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம்IIஅ /IIல் 8வருடத்திற்கு குறையாத சேவை அனுபவமுடைய உத்தியோகத்தர். |
| 2.1.4.ரூ 25001.00லிருந்து 100000.00 வரை | கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் I இனைச் சேர்ந்தவர் அல்லது கூட்டுறவு |

CCD & RCS – 021 2057063 Asst. Commissioner – 021 2057064 Accountant – 021 320 2190
Gen – 021 2057062 Fax – 021 753 8366 E- mail :- ccdnp@mail.com

| | |
|---|---|
| 2.1.4.ரூ 25001.00லிருந்து 100000.00 வரை | கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் I இனைச் சேர்ந்தவர் அல்லது கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் II(அ)/IIல் 15வருடத்திற்கு குறையாத சேவை அனுபவமுடைய உத்தியோகத்தர். |
| 2.1.5.ரூ100001.00 லிருந்து ரூ250000.00 வரை | கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் Iல் 5வருடத்திற்கு குறையாத சேவை அனுபவம் உடைய உத்தியோகத்தர். |
| 2.1.6.ரூ250,001.00லிருந்து ரூ 500000.00 வரை | மாவட்டக்கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் அல்லது கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் Iல் 15 வருடத்திற்கு குறையாத சேவை அனுபவமுடைய உத்தியோகத்தர் |
| 2.1.7.ரூ500001.00லிருந்து ரூ 750,000.00 வரை | மாவட்டக்கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவியில் மூன்று வருடத்திற்கு குறையாத சேவை அனுபவமுடையவர் அல்லது கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர். |
| 2.1.8.ரூ750001.00லிருந்து ரூ 1000000.00 வரை | கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அல்லது இலங்கை நிர்வாக சேவை தரம் IIற்கு குறையாத உத்தியோகத்தர்.. |
| 2.1.9.ரூ1000001.00ற்கு மேல் | கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சேவையில் 3 வருடத்திற்கு குறையாத அனுபவமுள்ளவர். ஆல்லது இலங்கை நிர்வாக சேவையில் தரம் II ற்கு குறையாத உத்தியோகத்தர். |

2.2.கடன்பிணக்குகள்

| | |
|---|---|
| 2.2.1.ரூ25000 வரை | கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் IIஆ/III சேர்ந்த 3 வருடத்திற்கு குறையாத சேவை அனுபவமுடையவரும், பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட உத்தியோகத்தர். |
| 2.2.2.ரூ25001.00லிருந்து | கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம்IIஆ /III ல் 5வருடத்திற்கு குறையாத சேவை அனுபவமுடையவரும் பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட உத்தியோகத்தர். |

1. .தபால் காகிதாதி செலவினங்களுக்கு பற்றுச்சீட்டுக்களை சமர்ப்பித்து பணத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.

2. .நடுத்தீர்ப்பாளர்களை நியமிக்கும் போது அல்லது சிபார்சு செய்யும் போது அவர்களது திறமை நேர்மை ஆற்றல் என்பன தங்கள் கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும். நடுத்தீர்ப்பாளர்களை குறித்த தகைமையுடைய சேவையில் உள்ளவர்களையோ அல்லது இளைப்பாறியவர்களையோ சிபார்சுசெய்யமுடியும்.

3. ரூ 25000.00 வரையான பிணக்குகளுக்கு தங்களால் குறித்த தகைமையுடையவர்களை நிமிக்க முடியும் 25000.00 இற்கு மேற்பட்ட பிணக்குகளுக்கு நடுத்தீர்ப்பாளர்களுக்கு என் அனுமதிக்கமையவே நியமிக்க முடியும்.

4. இவ்வாறு ஆற்றுப்படுத்தப்படும் பிணக்குகள் நியமனத்திகதியில் இருந்து 3 மாத காலத்துள் குறிப்பிட்ட நடுத்தீர்ப்பாளரால் விசாரணைசெய்யப்பட்டு தீர்ப்பு வழங்கப்படல்வேண்டும் கால நீடிப்பு கோருமிடத்து அது நியாயமாதென கருதின் நீடிப்பு வழங்கப்படலாம் . அல்லது அவரது இடத்திற்குப்பிறிதொருவர் நியமிக்கப்படல் வேண்டும்.

5. .நடுத்தீர்ப்பாளர் ஒருவரால் விசாரணை முடிவுறுத்தப்பட்டு அறிக்கைகள் தங்களுக்கு சமர்ப்பிக்கும் போது அதன் தரம் பற்றி ஆராய்ந்து உறுதிப்படுத்திய பின்னரே அதற்கான கொடுப்பனவுகள் வழங்கப்படல் வேண்டும்.

6. .நடுத்தீர்ப்பு கட்டணமாக சங்கங்களிடமிருந்து பெறப்படும் வைப்புகள் யாவற்றுக்கும் பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்படுவதுடன், இதற்கான காசேடும், பேரேடும் பேணப்படல் வேண்டும்.

7. பொதுப்பிணக்கு தொடர்பில் அந்தந்த மாவட்டத்தில் குறிப்பிட்ட தகைமையுடையோர் நடுத்தீர்ப்பாளர்களை பெறமுடியாவிடத்து,அவர்களை [illegible] வெளிமாவட்டத்திலிருந்து நியமிக்கும் போது மேலதிகமாக அவர்களது கொடுப்பனவிற்கு ஆகக் கூடியது 5 நாட்களுக்கான இணைந்த படியினையும், பொதுப் போக்குவரத்துப் படியினையும் வழங்க முடியும்.

இச்சுற்றுநிருபம் அமுலுக்குவரமுன் இறுதியாக நடைமுறையிலிருந்த சுற்றுநிருபம் இல 14/2006, 09.11.2006ம் திகதியது இத்தால் இரத்துச்செய்யப்படுகின்றது.

கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்,
கூட்டுறவுச்சங்கப்பதிவாளரும்,
வடமாகாணம்.